# சியாமா பிரசாத் முகர்ஜியின் 125வது பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் அவர்களின் உரை

இடம் – மேரி ஹால், கடற்கரை சாலை          தேதி – 06-07-2025

மதிப்பிற்கு உரிய முதலமைச்சர், சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அன்பிற்கு உரிய பொது மக்கள் அனைவருக்கும் வணக்கம்.

நாம் நம்முடைய தேசிய ஒற்றுமையை, சமூக நீதியை, பண்பாட்டுப் பெருமையை கட்டக் காக்கும் பெருமையோடு இங்கே ஒன்று கூடி இருக்கிறோம். இந்த உன்னதமான நேரத்தில் இன்றைய தலைமுறைக்கும் எதிர்கால இந்தியாவுக்கும் வழிகாட்டியாக, ஒளிவிளக்காக இருக்கும் தேசிய தலைவர்களின் வாழ்க்கையை, அவர்கள் செய்த தொண்டை நினைவு கூர்வது - அவர்கள் செய்த தியாகத்திற்கு நாம் செய்யும் மரியாதை.

“நாட்டிற்காக வாழ்ந்து, நாட்டிற்காகவே உயிர் தியாகம் செய்த தலைவர்கள் - வரலாற்றில் மிக சிலரை தான் பார்க்க முடிகிறது. அப்படிப்பட்ட அரிதான வரலாற்று தலைவர்களில் ஒருவர் தான் டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி.

அவருடைய 125வது பிறந்த நாளைதான் நாம் இன்று கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். நாட்டின் ஒற்றுமை, கல்வி-சமுதாய மேம்பாடு, தொழில் வளர்ச்சி, ஏழை எளியவருக்கான தொண்டு என்று வாழ்ந்த தலைவரின்

சிந்தனையும் செயலும் இன்று காலம் கடந்தும் பேசப்படுகிறது என்றால் – அதுதான் அவரது சிந்தனையின் வலிமை - தூய்மை.

இந்த நேரத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும் மாண்புமிகு உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களுக்கும் நாம் நன்றி சொல்லியாக வேண்டும். ஏனென்றால், AZADI KA AMRIT MAHOTSAV கொண்டாட்டத்தின் கீழ் - அரசியல் காரணத்தால் மறக்கப்பட்ட – மறைக்கப்பட்ட நம்முடைய தலைவர்களின் வரலாற்றை இந்த நாடும் நாட்டு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று வழிகாட்டினார்கள். அதனால் தான் சியாமா பிரசாத் முகர்ஜி, வேலு நாச்சியார், வெள்ளையர்களின் பாசறையை வெடி வைத்து தகர்த்த குயிலி போன்றவரை நாடு இன்று கொண்டாடுகிறது.

இன்று நாம் பெருமையோடு நினைவுகூறும் சியாமா பிரசாத் முகர்ஜி ஒரு தலைசிறந்த தேசியவாதி, கல்வியாளர். அரசியல் கொள்கையோடு, அர்ப்பணிப்போடு வாழ்ந்தவர். அவருடைய கொள்கை, அவர் உருவாக்கிய அரசியல் சிந்தனை - இன்றைய மத்திய அரசின் கொள்கையாக எதிரொலிக்கிறது.

தன்னுடைய மன் கி பாத்தில் பாரதப் பிரதமர் சொன்னதை போல ஏழைகளுக்கு சேவை செய்வதும், ஒடுக்கப்பட்டவர்களை மேம்படுத்துவதும் அரசின் முதல் கடமை என்று நம்பியவர் டாக்டர் சியாமா அவர்கள்.

கொல்கத்தாவில் பிறந்து, இங்கிலாந்தில் BARRISTER பட்டம் பெற்று, கொல்கத்தா உயர்நீதி மன்றத்தில் வக்கீலாக பணியாற்றி, பின்னர் கொல்கத்தா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக பதவி ஏற்றார். அதன் பிறகு அரசியலில் முழுமையாக ஈடுபட்டு வங்காளத்தின் நிதி அமைச்சராக பொறுப்பு வகித்தார். 1947 இல் இந்தியா விடுதலை அடைந்த போது முதல் LOK SABHA-வில் மத்திய தொழில் மற்றும் உற்பத்தித்துறை அமைச்சராக பணியாற்றினார். மக்களின் அடிப்படை உரிமைகளை பாதிக்கும் அரசின் நடவடிக்கையை எதிர்த்து குரல் கொடுத்தார். கொள்கை மாறுபாட்டால் 1951-இல் **‘BHARATHIYA JANA SANGH’** என்ற அரசியல் கட்சியை தொடங்கினார். அதுவே இன்று பாரதிய ஜனதா கட்சியாக வளர்ந்து நிற்கிறது.

சியாமா பிரசாத் முகர்ஜி, இந்திய நாடு ஒன்றாக, ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதில் தீவிரமாக - உறுதியாக இருந்தார். மதத்தின் அடிப்படையில் இந்தியா – பாக்கிஸ்தான் என்று பிரிந்ததை கடுமையாக எதிர்த்தார். மக்களின் சுதந்திர கொள்கைக்கு எதிரானது என்று பேசினார். ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் ஒன்றுபட்ட பகுதியாக இருக்க வேண்டும் என்று வாதாடினார். ஜம்மு-காஷ்மீர் பகுதிக்கு என்று தனி அரசியல் சாசனம், தனி ஆட்சி இருப்பதை குறை கூறினார். (ARTICLE 370 இப்போது நீக்கப்பட்டு இருக்கிறது.)

மேற்கு வங்காளத்தில், 1941 இல் டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி முஸ்லிம் கட்சியுடன் சேர்ந்து

கூட்டணி ஆட்சி அமைத்ததுதான் வங்காளத்தில் உருவான முதல் மற்றும் கடைசி இந்து-முஸ்லிம் அமைச்சரவை என்று வரலாறு சொல்லுகிறது.

1934 முதல் 1938 வரை CALCUTTA UNIVERSITY – இன் VICE-CHACELLOR –ஆக இருந்த போது பல கல்வி மாற்றங்களை கொண்டு வந்தார். AGRICULTURE EDUCATION. WOMEN EDUCATION. TEACHER TRAINING. MUSEUM. LIBRARY FACILITIES. DEFENCE TRAINING. EDUCATION FOR ALL போன்ற புதிய மாற்றங்களுக்கு வழி ஏற்படுத்தினார். இளைஞர்கள் கல்வி பெறும் போது மட்டுமே நாட்டின் வளர்சிக்கு முழுமையாக பாடுபட முடியும் என்று நம்பினார்.

இந்திய தொழில்துறை வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்கு அதிகம். பெரிய தொழிற்சாலைகள் மட்டும் அல்லாமல் சிறு-குறு தொழில்களுக்கும் முன்னுரிமை தந்தார். நம்முடைய பாரம்பரிய தொழில்களை வளர்க்க பாடுபட்டார். அதற்காக KHADI & VILLAGE INDUSTRIES BOARD, ALL INDIA HANDICRAFTS BOARD, ALL INDIA HANDLOOM BOARD ஆகியவற்றை ஏற்படுத்தினார்.

அவரது முயற்சியால் இந்திய தொழில்துறை விரிவு அடைந்தது. CHITTARANJAN RAILWAY LOCOMOTIVE WORKS, HIDUSTAN AIRCRAFT FACTORY, SINDRI FERTILIZER PLANT, DAMODAR VALLEY CORPORATOIN என்று பல பெரு தொழிற்சாலைகளை தொடங்கினார். பாதுகாப்பு துறையில், உள்நாட்டு உற்பத்திக்கு அவர் முக்கியத்துவம் தந்தார். நாட்டின் தொழில் கொள்கையை உருவாக்வதில்

முக்கிய பங்கு ஆற்றினார். மொத்தத்தில் டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜியின் வாழ்க்கை என்பது கல்வி, பொருளாதாரம், சமுதாய வளர்ச்சி என்ற கொள்கையின் கலவை என்று சொல்லலாம். தேசத்தின் நலன், பாதுகாப்பு எல்லாவற்றையும் விட உயர்ந்தது என்பதை வாழ்ந்து காட்டியவர். அவருடைய சிந்தனை, பார்வை, தியாகம் எல்லாம் இந்த தேசத்திற்கு முன் உதாரணமாக வழிகாட்டியாக இருக்கிறது என்பது தான் உண்மை.

இன்றைய இளைஞர்களுக்கு நான் சொல்ல விரும்புவது – அன்பானவர்களே...! விடுதலை அடைந்த 100-வது ஆண்டில் வளர்ச்சி அடைந்த பாரதம் VIKSIT BHARAT@2047 என்ற உன்னதமான லட்சியத்தோடு நாம் பயணம் செய்து கொண்டு இருக்கிறோம். அதை நீங்கள் தான் வழிநடத்த போகிறீர்கள். அதற்காக உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள். நம் பாரத நாட்டின் வளர்ச்சிக்காக பணியாற்ற உங்களை அர்பணித்துக் கொள்ளுங்கள். அதற்கு சியாமா பிரசாத் முகர்ஜி போன்ற நம்முடைய தேசத் தலைவர்களின் தியாக வாழ்க்கை உங்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும்.

நண்பர்களே...! நம்முடைய நாட்டின் வரலாறு என்பது நாட்டிற்காக உழைத்த தலைவர்களின் தியாகம் மற்றும் போராட்டத்தின் வரலாறு என்பதை புரிந்து கொள்ளுங்கள். இந்த வரலாற்றின் ஆதாரமாக இருந்த தலைவர்களின் வாழ்க்கையை தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் காட்டிய வழியை பின்பற்றுங்கள்.

மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், வல்லபாய் பட்டேல், அம்பேத்கர், பகத்சிங், சியாமா பிரசாத் முகர்ஜி, பாரதி, வ.உ.சி. இன்னும் எத்தனையோ பேர். இவர்கள் ஒவ்வொருவரும் பாரதத்தை உருவாக்கிய தேசபக்தர்கள். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்து, பாரத நாட்டை உருவாக்கியவர்கள்.

இந்த வரலாறு, நம்முடைய மனதில், பள்ளிகளில், வீடுகளில் ஒலிக்க வேண்டும். அதிலிருந்து புத்துணர்ச்சி பெற்று "இந்த நாட்டிற்காக நாமும் ஏதேனும் செய்ய வேண்டும்" என்ற எண்ணம் உங்களுக்குள் வளர வேண்டும்.

இன்றைய இளம் தலைமுறை அறிவும் ஆற்றலும் கொண்டது. அந்த ஆற்றலை சரியான வழியில் செலுத்த வேண்டும். அதற்கு தேசிய தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் ஒரு பாடமாக அல்ல, நம்முடைய வாழ்வியல் நெறியாக இருக்க வேண்டும். வரும் தலைமுறைகளுக்கு அந்த தலைவர்களின் வரலாற்றை நாம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**நன்றி... ! வணக்கம்... 1**